பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# மேற்குத் தொடர்ச்சி மலைப் பளியர் பழங்குடிகளின் வாழ்வியல் மாற்றங்களும் சவால்களும் : ஓர் ஆய்வு

**செல்வி. ஆ. தேவிகா**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலைத்தமிழ் உயராய்வு மையம், ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம், தேனி மாவட்டம் - 625 601 மின்னஞ்சல் : 23JPTAS02@annejac.ac.in

நெறியாளர்: **முனைவர் க. சகாய கிரேஸி**
உதவிப்பேராசிரியர், முதுகலைத்தமிழ் உயராய்வு மையம், ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம் - 625 601

**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வாய்வுக்கட்டுரை, தென்தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடி இன மக்களான 'பளியர்' சமூகத்தின் மரபுவழி வாழ்வியலையும் தற்காலத்தில் அவர்கள் சந்தித்து வரும் வாழ்வியல் மாற்றங்களையும் எதிர்கொள்ளும் சவால்களையும் விரிவாக ஆராய்கிறது. பளியர் மக்களின் இயற்கை சார்ந்த இருப்பிடம், வேட்டையாடுதல் மற்றும் வனப்பொருள் சேகரித்தல் போன்ற பாரம்பரியத் தொழில்கள், உணவமைப்பு, கொற்றவை மற்றும் முருகன் வழிபாடு உள்ளிட்ட சடங்கு முறைகள் ஆகியவை நற்றிணை, சிலப்பதிகாரம் போன்ற சங்க இலக்கியச் சான்றுகளுடன் இங்கு நிறுவப்பட்டுள்ளன. மேலும், நவீனமயமாக்கல், வன உரிமைச் சட்டங்கள் (FRA 2006), அரசு நலத்திட்டங்கள் மற்றும் நகர்ப்புறத் தொடர்புகளால் இவர்களது இருப்பிடம், தொழில், உணவு, உடை மற்றும் சடங்கு முறைகளில் ஏற்பட்டுள்ள பண்பாட்டுச் சிதைவுகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பட்டா மற்றும் அரசுச் சான்றுகள் பெறுவதில் உள்ள சிக்கல்கள், சமூகப் புறக்கணிப்பு, கல்வியின்மை மற்றும் பாரம்பரிய மருத்துவ அறிவு அழிந்து வருதல் போன்ற இக்காலச் சவால்களை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. இப் பழங்குடி மக்களின் தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தையும் பழந்தமிழர் எச்சங்களையும் பாதுகாப்பதற்குச் சிறப்புக் கல்வி, விழிப்புணர்வு மற்றும் முறையான ஆவணப்படுத்துதல் அவசியம் என்பதை இவ்வாய்வு முடிவாக முன்வைக்கிறது.

**திறவுச்சொற்கள்:** மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள், பளியர் பழங்குடிகள், வாழ்வியல் கூறுகள், வாழ்வியல் மாற்றங்கள், எதிர்கொள்ளும் சவால்கள்.

**ஆய்வு முன்னுரை**

மனிதகுலம் தான் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரையிலும் பல்வேறு பரிணாம வளர்ச்சியை பெற்றுள்ளது. காடுகளில் விலங்குகளோடு விலங்காக திறந்த மனிதன் காலப்போக்கில் இலைதழை ஆடைகளை அணிந்து விலங்குகளை வேட்டையாடி உணவு உண்டு கற்குகைகளில் உயர்ந்த மரக்கிளைகளில் உறங்கி வாழ்ந்தான் . இதுவே அவனது அடிப்படை தேவைகளாக இருந்தது. அதன்பின்னர் பல்வேறு இனக்குழுக்ககளாக பிரிந்து இடம் விட்டு இடம்பெயர்ந்து தங்களுக்கென்று ஒரு தொழிலை அடையாளத்தை உருவாக்கிக்கொண்டான். இதுவே இன்றைய சமூகத்தில் சாதிகள் உருவாக அடிப்படையாக அமைந்தது எனலாம். இருப்பினும் இன்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் தங்கள் முன்னோர் பின்பற்றிய வாழ்க்கை முறையை மாற்றாது வாழ்ந்து வரும் ஒரு இனத்தை ஒரு இனக்குழுவை பழங்குடிகள் அல்லது தொல்குடிகள் என்று குறிப்பிடுகிறோம். அவர்களுள் பளியர் இன மக்களும் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். ஆனால் இன்றைய சூழலில் பல்வேறு காரணிகளால் அவர்களின் பண்பாடு பழக்கவழக்கங்கள் சடங்குமுறைகள் ஆகியவற்றில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய மாற்றங்களையும் அதற்கான காரணங்களையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் பற்றி இக்கட்டுரையில் காணலாம் .

**பளியர் இன பழங்குடி ஓர் அறிமுகம்**

ஒரு குடி தான் தோன்றிய காலத்திலிருந்து தற்போது வரையிலும் தங்கள் மரபுகளை மாற்றாமல் இன்றும் அதன்வழி வாழும் குடிகள் 'தொல்குடிகள்' என்றும் வாழ்வியல் சூழல் காரணமாக தங்கள் மரபுகளில் இருந்து சற்று மாறுபட்டு இன்றைய நாகரீக வாழ்க்கை முறையை ஏற்று வாழும் குடிகள் 'பழங்குடிகள்' என்றும் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களுள் பளியர் இன மக்கள் பழங்குடிகளாக அறியபப்டுகின்றனர். இவர்கள் தென்தமிழகத்தில் குறிப்பாக, தேனி, மதுரை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகின்றனர். தேனி மாவட்டத்தில் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் வெள்ளிமலைப் பகுதிகளிலும் வருசநாடு மலைப்பகுதிகளிலும் குமுளி மலைப்பகுதிகளிலும் (கண்ணகி கோட்டம் உள்ள மலைப்பகுதி) திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி மலை, சிறுமலை, கொடைக்கானல் மலைப்பகுதிகளிலும் இம்மக்கள் வாழ்கின்றனர். பழையோர் என்ற சொல் பழியர் என்று மருவி பின் பளியர் என்றானது எனும் கூற்று நிலவுகிறது. பளியர் என்ற சொல் நேரடியாக தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்படவில்லை. மலைவாழ் மக்கள், வேடுவர்,கானகர், குறவர் என்ற பெயர்களில் இவர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர் . குறிஞ்சி நில மாந்தர்களான குறவர் மக்களோடும் முல்லை நில மாந்தர்களான ஆயர்களோடும் இவர்கள் பொருந்தி வாழ்கின்றனர்.

**பளியர் இன மக்களின் மரபுவழி வாழ்வியல் முறை**

**இருப்பிடம்:** பளியர் இன மக்களின் வாழ்வாதாரம் இயற்கை சார்ந்ததாகவே உள்ளது. பழைய கற்குகைகளிலும், பாறை இடுக்குகளிலும்,பெரிய மரப்பொந்துகளிலும், அடர்ந்த புதர்களிலும், மூங்கிலால் ஆன சிறுகுடில்களிலும் இவர்கள் வாழ்ந்தனர்.

**தொழில்:** இம்மக்களின் முதன்மை தொழில் வேட்டையாடுதல்,தேன் எடுத்தல், தினைப்புனம் காத்தல் ஆகும். இது குறித்து,

*“கொடு வில் கானவன் கோட்டுமா தொலைச்சிப்*
*பச்சூன் பெய்த பகழி போல*
*சேயரி பரந்த ஆய் இதழ் மழைக் கண்*
*உறாஅ நோக்கம் உற்ற என்*
*பைதல் நெஞ்சம் உய்யுமாறே”*

(நற்றிணை : 75 : 5-10)

என்று நற்றிணை பாடல் குறிப்பிடுகிறது. இரண்டாம் நிலை தொழிலாக கிழங்கு அகழ்தல், வனப்பொருள் சேகரித்தல், மூலிகைகள் சேகரித்தல் ஆகியவற்றை செய்கின்றனர்.

**உணவுமுறை:** இவர்கள் வேட்டையாடுதல் மூலம் பெறப்படும் விலங்கு இறைச்சி, கிழங்கு வகைகள், காடுகளில் கிடைக்கக்கூடிய பழ வகைகள், தினைப்புனத்தில் கிடைக்கக்கூடிய வெண்ணெல், வரகு, சாமை ஆகியவற்றை உணவாக கொள்கின்றனர். இது குறித்து,

*“ஐவன வெண்ணெல்லும் கொழும்புன வரகும்*
*காயமும் மஞ்சளும் ஆய்க்கொடிக் கவலையும்*
*வாழையும் கமுகும் தாழ்குழைத் தெங்கும்*
*மாவும் பாலாவும் சூழ் அடுத்து ஓங்கிய*

*( சிலம்பு : 11 : 80 - 85 )*

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

**வழிபாடு மற்றும் சடங்குகள்:** பளியர் இன மக்கள் இயற்கையையே தங்கள் முதன்மை தெய்வமாக வணங்குகின்றனர். இயற்கையிலிருந்தே தங்களின் அடிப்படை தேவைகளான உணவு உடை இருப்பிடம் ஆகியவற்றைப் பெறுவதால் அதனை வன தேவதைகளாக வழிபடுகின்றனர். வேட்டையாடுதலின் போது கொற்றவையை வழிபடுகின்றனர். குறிஞ்சி நிலத் தலைவனான முருகப்பெருமானையும், முருகப்பெருமான் குறவர் குலப் பெண்ணான வள்ளிப்பிராட்டியை மணந்ததால் அவளையும் சேர்த்து வணங்குகின்றனர். முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்தி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். இது குறித்து,

*“குறமகள் அவளெம குலமகள் அவளோடும்*
*ஆறுமுக ஒருவனின் அடியிணை தொழுதேம்”*
*(சிலம்பு : 24 : 85 - 86)*

இவ்வாறாக சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது.

**சமூகவாழ்வு:** மக்கள் எவ்விதப் பாகுபாடும் இன்றி அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்தனர். தங்கள் இனக்குழுவுக்கென்று தனியொரு தலைவனை நியமிக்காமல் அரசன் ஒருவனே தங்கள் அனைவருக்கும் தலைவன் என்ற கொள்கை உடையவர்களாக விளங்கினர். மலைகளிலும் காடுகளிலும் வாழ்வதாலோ என்னவோ விலங்குகளின் தாக்குதலிலிருந்ததும் அச்சுறுத்துதலிலிருந்தும் தங்களை பாதுகாத்துக்கொள்ள அனைவரும் ஒன்றுகூடி வாழ்ந்தனர். கிடைக்கும் பொருள்களை பகிர்ந்து உண்ணும் பழக்கம் கொண்டவர்களாக இருந்தனர். தொழில் தேடி வேறு இடம் செல்லாமல் தங்கள் வாழ்விடத்திலேயே அனைத்தையும் ஏற்படுத்திக்கொண்டனர். தங்கள்

மலைகளில் கிடைக்கக்கூடிய பொருள்களை பிற நிலங்களுக்கு பண்டமாற்றம் செய்தனர்.

**தற்கால வாழ்வியல் மாற்றங்கள்**

**இருப்பிடம் சார்ந்த மாற்றம் :** தங்கள் முன்னோர் வாழ்ந்த முறை போல் அல்லாமல் இன்று அரசு நலத்திட்டத்தின் கீழ்க்கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகளிலும் இன்றைய நவீனமுறைகளில் தாங்களாக கட்டிய வீடுகளிலும் தற்போது வாழ்ந்து வருகின்றனர். இதனால் இவர்களது கலாச்சாரம் சார்ந்த பண்பு பாதிக்கப்படுகிறது.

**தொழில் சார்ந்த மாற்றம் :** இன்றைய சுதந்திர காலத்து தோன்றிய வன உரிமைச் சட்டம் (FRA 2006) காடுகளில் வேட்டையாடக்கூடாது என்றும் வனப்பொருள்களை மட்டும் சேகரிக்க அனுமதி உள்ளது என்றும் சட்டம் இயற்றப்பபட்ட நிலையில் தங்கள் முன்னோரது குலத்தொழிலாக வேட்டையாடுதலை முற்றிலுமாக இம்மக்கள் தவிர்த்துவிட்டனர். இதனால் களை வெட்டுதல், நாற்று நடுதல் மற்றும் கட்டிட வேலைகளுக்குச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. இது அவர்களின் மரபுவழி பழக்கவழக்கங்களை முற்றிலும் சிதைவுக்கு உள்ளாக்கியது எனலாம். மேலும் வனத்தில் சேகரித்த தேன்,மூலிகைகள் ஆகியவற்றிற்கு நியாயமான விலைநிர்ணயம் இல்லாமல் ஏமாற்றப்படுகின்றனர்.

**உணவுமுறை சார்ந்த மாற்றம் :** இன்றைய நாகரிக மக்கள் பின்பற்றும் உணவுமுறைகளை இம்மக்கள் தற்போது ஏற்றுக்கொண்ட நிலை உள்ளது. வனத்தில் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய உணவுகளை சற்றே ஒதுக்கிவிட்டு செயற்கையான உணவுகளையும் செயற்கை குளிர்பானங்கள், செயற்கை இனிப்புப் பொருள்கள், துரித உணவுகளையும் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். மேலும் நகர்ப்புற நாகரிகத்தின் வரவால் மதுபானம், புகைப்பிடித்தல் போன்றவைகளுக்கு பழக்கப்படுகின்றனர். இதனால் இவர்களது பண்பாட்டுச் சிதைவு ஏற்பட்டு பெரும் மாற்றம் நிகழ்கிறது.

**சடங்கு சார்ந்த மாற்றம் :** பண்டைய பளியர் இனத்தார் குழந்தை பிறப்பின்போது புலியின் பாலை அக்குழந்தையின் நெற்றியில் திலகம் இட்டு வரவேற்பர் . இன்று அந்த வழக்கம் முற்றிலும் அழிந்துவிட்டது. ஒரு பெண் பூப்பெய்தலின் போது 30 நாட்கள் தனியொரு குடிலில் அமரவைக்கும் முறை தற்போது இல்லை. தங்கள் இருக்கும் வீட்டிலேயே அனைத்து சடங்குகளையும் செய்து கொள்கின்றனர். மேலும் திருமணத்தின் போது தங்கள் குலதெய்வமான பளிச்சி அம்மன் முன்னிலையில் வள்ளிக்கிழங்கின் வேரால் செய்யப்பட்ட தாலியை பெண்கள் அணிவர். தற்போது நகர்ப்புற மக்களைப்போல் மஞ்சள் கயிற்றிலும் தங்கத்திலும் தாலி செய்து அணிகின்றனர். ஆண் பெண் இருவரும் இன்றைய நாகரிக மக்கள் உடுத்தும் ஆடைகளையும் அணிகலன்களையும் அணியும் பழக்கத்தை கையாளுகின்றனர். இது முற்றிலும் கலாச்சாரச சீர்கேட்டிற்கு வழிவகுத்தது எனலாம்.

**சமுகம் சார்ந்த மாற்றம் :** இன்றைய உலக வழக்கில் இம்மக்கள் நகர்ப்புற மக்கள் பார்வைக்கு மிகவும் தாழ்ந்தவர்களாக உள்ளனர். அரசின் நலத்திட்டங்கள், ஊதியங்கள், ஆவணப்படுத்துதல், பிறப்பு இறப்பு விகிதம், அரசு சான்றிதழ் பெறுதல் போன்றவற்றில் மிகுந்த சிக்கலுக்கு உள்ளாகின்றனர். காடுகளில் வாழ்வதால் நிரந்தர குடியிருப்புக்கான பட்டா இல்லாமலும் உரிமம் இல்லாமலும் முறையாக ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை போன்றவை இல்லாமலும் உள்ளனர். மேலும் கல்வி நிலையங்களில் பிற மாணவர்களின் கேலி கிண்டல் பேச்சுக்கு ஆளாகி கல்வியே வேண்டாம் என்னும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பிற மக்களைப்போல் தாங்களும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தங்கள் பழக்கவழக்கம் பண்பாடு, கலாச்சாரம் மரபு ஆகியவற்றை முற்றிலும் தவிர்த்து இன்று பெயருக்கு தங்கள் இவ்வின மக்கள் என்ற அடையாளத்தோடு ஒரு செயற்கை வாழ்வை வாழ்கின்றனர். மேலும் இவர்களது பாரம்பரிய சித்த வைத்திய முறை முறையாக ஆவணப்படுத்தப்படாமலும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லாத காரணத்தினாலும் பிற மக்கள் ஆங்கில மருத்துவ முறையை நாடுவதாலும் அழியும் நிலையில் உள்ளது.

**ஆய்வு முடிவுரை**

மலைவாசிகள், காட்டுவாசிகள், காட்டுமிராண்டிகள், பழைய மரபினர், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தினர் என்றெல்லாம் குறிப்பிடப்படும் இம்மக்களே ஆதி தமிழர்கள் விட்டுச்சென்ற பண்பாடு பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மருத்துவக் குறிப்புகள்,சடங்கு முறைகள், ஆன்மீகம், மரபு சார்ந்த தொழில்நுட்பம் போன்ற எச்சங்களை அழிய விடாமல் இன்றளவும் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். பண்டைய கால தமிழ்ச் சமூகத்திற்கும் இன்றைய நாகரீக வளர்ச்சி பெற்ற தமிழ்ச் சமூகத்திற்கும் ஓர் இணைப்பு பாலமாக

இம்மக்கள் விளங்குகின்றனர். மேலே குறிப்பிட்ட சில காரணங்களால் தங்கள் அடையாளங்களை மறைத்தும் மறுத்தும் வாழ்ந்து இன்று மாற்றம் பல கண்டு தாங்களாக முன்வந்தும் அல்லது பிற காரணிகளால் கட்டாயப்படுத்தப்பட்டும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். இதனால் அவர்களின் கலாச்சாரம் பண்பாடு சார்ந்த கூறுகள் அனைத்தும் சிதைந்தது மட்டுமின்றி பழந்தமிழர்கள் விட்டுச்சென்ற எஞ்சியுள்ள எச்சங்களும் அடுத்த தலைமுறையினருக்கு தெரியப்படுத்தும் வாய்ப்பு இல்லாமல் போனது. இதைத் தவிர்க்க இம்மக்களிடையே சிறப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவர்களுக்கென சிறப்புக் கல்வி மையங்களை ஏற்படுத்தி உயர்கல்வி செல்லும் வாய்ப்பை நல்கவேண்டும். இவர்களுடைய மரபுவழி சார்ந்த கூறுகளை ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்த்தால் மட்டுமே இப்பழங்குடி மக்களின் தனித்துவ அடையாளத்தைக் காப்பாற்ற இயலும்.

**துணைநூற் பட்டியல்**


1. புலியூர்க்கேசிகன், நற்றிணை தெளிவுரை, பாரி நிலையம், சென்னை – 600108, முதற்பதிப்பு – 1967
2. வேங்கடசாமி நாட்டார், ந. மு., சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சேகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,சேப்பாக்கம் , சென்னை, முதற்பதிப்பு – 2008


*****